அங்கே மேற்கொள்ள, ஏற்கெனவே அதிகாரிகள் நேரடியாகச் சென்று ஆய்வு செய்திருக்கின்றார்கள். அதற்கான திட்டப் பணிகளும் ஆய்விலே இருக்கின்றது என்பதைத் தங்கள்வாயிலாக இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா போய் வந்தாகி விட்டது. அமைச்சருக்கு நன்றி. (சிரிப்பு)*

அடுத்து, வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

உணவுக் கட்டணம்

***216 திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் விடுதிகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தை அதிகரித்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளி, கல்லூரி விடுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் மற்றும் அரசு உதவிபெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நல்ல தரமான உணவு வழங்கிட, என்றுமே அடித்தட்டு மக்களாகிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனில் அக்கறை கொண்டுள்ள, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுவரை எந்த அரசாலும் உயர்த்தி வழங்கிடாத உயர்ந்த அளவாக (மேசையைத் தட்டும் ஒலி) 2011–2012 ஆம்

2012 பிப்ரவரி 4]

கல்வியாண்டிலிருந்து பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு, ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 450/—இலிருந்து, ரூபாய் 650/— ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 550/—இலிருந்து, ரூபாய் 750/— ஆகவும், உணவுக் கட்டணத்தை உயர்த்தி, அரசாணை நிலை எண் 123, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 5—12—2011—இன்மூலம் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் விடுதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தை, 450/— ரூபாயிலிருந்து 650/— ரூபாயாகவும், 550/— ரூபாயிலிருந்து 750/— ரூபாயாகவும் உயர்த்தியிருப்பதற்கு நன்றி. ஆனால், இப்படி உயர்த்திக் கொடுத்திருக்கக்கூடிய இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொண்டு, கல்லூரிகளில் இருக்கக்கூடிய வார்டன்கள் முறையான வகையில், தரமான உணவுகளை வழங்குவதில்லை என்கின்ற புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்காணித்து, அரசு ஒதுக்கியிருக்கக்கூடிய இந்தத் தொகைக்கு ஏற்றாற்போல, தரமான உணவு வகைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1,254 ஆதி திராவிடர் நல விடுதிகளில் 87,136 மாணவ, மாணவிகளும், 40 பழங்குடியினர் நல விடுதிகளில் 2,072 மாணவ, மாணவிகளும், 296 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 30,807 மாணவ, மாணவிகளும் மற்றும் 36 அரசு உதவிபெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் 5,438 மாணவ, மாணவிகளும், ஆக மொத்தம், 1,25,453 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் தங்கி கல்விப் பயின்று வருகிறார்கள். விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும்

மாணவ, மாணவிகளுக்கு உணவு வழங்குவதற்காக உணவுக் கட்டணமாக இதுவரை பள்ளி விடுதி மாணவர் ஒருவருக்கு ரூபாய் 450/—உம், கல்லூரி விடுதி மாணவர் ஒருவருக்கு ரூபாய் 550/—உம் வழங்கப்பட்டு வந்த விடுதிகளில், தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில், அவர்களுக்குத் தரமான உணவு வழங்கிட தாயுள்ளம் கொண்டுள்ள, அடித்தட்டு மக்களாகிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்மீது என்றும் மாறாத பற்றுள்ளம் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இதுவரை எந்த அரசாலும் உயர்த்தி வழங்கப்படாத தொகையாக (மேசையைத் தட்டும் ஒலி) உணவுக் கட்டணத்தைப் பள்ளி விடுதி மாணவ, மாணவிகளுக்கு ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 450/—இலிருந்து ரூபாய் 650/—ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவிகளுக்கு ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 550/—இலிருந்து ரூபாய் 750/—ஆகவும் உயர்த்தி வழங்க 2011—2012 ஆம் கல்வியாண்டில், நிதிநிலை அறிக்கையின்போதே அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விடுதிகளிலே தங்கி கல்விப் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான உணவுக் கட்டணத்தை 2011—2012 ஆம் கல்வியாண்டு முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.450/—இலிருந்து ரூ.650/—ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.550/—இலிருந்து ரூ.750/—ஆகவும் உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மீண்டும் பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதிகளில் தரமான உணவுகள் வழங்கப்படுவதில்லை என்று கூறினார்கள். அது, எந்த விடுதி என்று குறிப்பிட்டுத் தெரிவிப்பார்களேயானால் நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதனை ஆய்வு செய்து, சரி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியல் இன மக்கள் மற்றும் பழங்குடியினத் துறையின்கீழ் இயங்கி வருகின்ற மாணவ, மாணவியர் விடுதிகளில் இருக்கக்கூடிய காப்பாளர்கள் அந்த விடுதிகளிலே தங்கியிருந்து,

2012 பிப்ரவரி 4]

விடுதியினுடைய சுகாதாரம், மாணவர்களுக்கு நல்ல உணவு, அவர்களுடைய கல்வி மேம்பாடு போன்றவற்றைக் கவனிக்க வேண்டியது கட்டாயம். ஆனால், பெரும்பாலான விடுதிக் காப்பாளர்கள் அந்த விடுதிகளில் தங்கி, இதுபோன்ற பணிகளைச் செய்வதில்லை என்பதை அரசு அறியுமா? அதுபோல விடுதிகளிலே தங்கி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கிருஷ்ணசாமி, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களால் கூறப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* specific-*ஆக* mention *செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதுபோன்று, இந்த விடுதியிலே, இந்தக் காப்பாளர் வரவில்லையென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். பொதுவாகச் சொல்லக் கூடாது.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *பெரும்பாலான விடுதிகளில் இதுதான் நடைபெறுகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எந்த விடுதியில் வரவில்லை என்று சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அதன்மீது நடவடிக்கை எடுப்பார்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *தமிழ்நாட்டில் இருக்கிற பெரும்பாலான விடுதிகளிலே நாங்கள் பார்க்கிறோம். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பெரும்பாலான விடுதிகளில் நடைபெறக்கூடிய செயல் இதுதான். அதனால் இது பொதுவானது. விடுதிகளில் விடுதிக் காப்பாளர்கள் தங்குவதில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதிகளில் விடுதிக் காப்பாளர்கள் தங்கியிருந்து பணியாற்றுவதில்லை என்று குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அவ்வப்பொழுது என் போன்றவர்களையெல்லாம் அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி அந்த விடுதிகளை எல்லாம் ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.*

அதன்படி ஆய்வு செய்துகொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த விடுதியில் வார்டன் தங்கியிருக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதுகுறித்து ஆய்வு செய்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இயங்கி வருகின்ற 1,600—க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுடைய விடுதிகளிலே எப்போதும் இல்லாத அளவிற்கு ஏழைகளின் ஏந்தலாக, ஏழைகளின் ஏணியாக, ஒடுக்கப்பட்ட மக்களின் உற்றத் தோழனாக விளங்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்கள் மிக அதிக அளவிற்கு அவர்களுடைய உணவுக் கட்டணத்தை உயர்த்தி, அதுமட்டுமல்லாமல் அந்த விடுதிகளைச் சீரமைப்பதற்கு அசுர வேகத்திலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதை ஒடுக்கப்பட்ட மக்கள் நன்றியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே உள்ள ஒரே ஒரு சிக்கலை மட்டும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வார்டன்களாக இருப்பவர்கள் எல்லாம் ஆதி திராவிடர் நலத் துறையைச் சேர்ந்தவர்கள். அதைக் கண்காணிக்கக் கூடியவர்கள், வருவாய்த் துறையைச் சேர்ந்த தனி வட்டாட்சியர்கள். தனி வட்டாட்சியர்களுக்குப் பல்வேறு பணிகள் இருக்கின்றன. ஆகவே, ஆதி திராவிடர் நலத் துறையிலே, அம்மா அவர்களுடைய நலத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கு ஒரு பறக்கும் படையை ஏற்படுத்தி அவ்வப்போது ஆய்வு செய்தால், அது சீரமைக்கப்படும். ஆகவே, தனி வட்டாட்சியர்களிடமிருந்து, ஆதி திராவிடர் நலத் துறையின் நேரடிக் கண்காணிப்பிலே இதைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*